Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. சனி வெளியீடு.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 17-11-1945 கார்த்திகை மீ 2உ { மலர் 6

## எது ஜீவகாருண்யம்?

### பார்ப்பனனுக்கும் சைவனுக்கும் சம்பாஷணை

(சித்திரபுத்திரன் எழுதியது)

சைவன்:- ஓய்! என்னாங்காணும் அய்யரே! நீர் இப்போது மாமிசம் சாப்பிடுகின்றீரே! என்ன இப்படி கெட்டுப் போய் விட்டீர்.

பார்ப்பனன்:-வாரும் வாரும் பிள்ளைவாள்! எனக்கு வரவர ஜீவஹிம்சை என்றால் சற்றும் பிடிப்பதே இல்லை. இன்றைக்குச் சாகின்றோமோ, நாளைக்குச் சாகின்றோமோ; இதற்குள் என் அநியாயமாய் பல ஜீவன்களை ஹிம்சை செய்யவேண்டுமென்பதாகக் கருதியே இனிமேல் காய்கறிகள் சாப்பிடுவதில்லை என்று தீர்மானித்து மாமிசம் சாப்பிடத் துணிந்துவிட்டேன்.

சைவன்:- என்னங் காணும் பார்ப்பனர்! ஜீவ ஹிம்சை கூடாதென்கின்றீர். அதற்காக மாமிசம் சாப்பிடுகின்றேன் என்கின்றீர். இது என்ன போக்கிரித் தனமா அல்லவா.

பார்ப்பனன்:- கோபித்துக் கொள்ளாதீர் ஐயா! நீர் சைவரல்லவா? உமக்கு வெறும் கோபந்தான் வருமேயொழிய விஷயம் புலப்படுவது தான் கஷ்டம்.

சைவன்:-என்னபார்ப்பனக் குறும்பை நம்மிடம் காட்டுகிறாய். பார்ப்பான் மாமிசம் சாப்பிட்டுத்தான் இந்த நாடு பாழாச்சுது.

பார்ப்பனன்:- இந்த நாடு தான் பார்ப்பனன் மாமிசம் சாப்பிட்டு பாழாச்சுது சரி, வெள்ளைக்கார நாடு என்ன சாப்பிட்டு நல்லா ஆச்சுது? தவிரவும் இந்தியாவில் உள்ள 43 கோடி மக்களில் மாமிசம் சாப்பிடுகின்றவர்கள் எத்தனை பேர் சாப்பிடாதவர்கள் எத்தனை பேர் என்பது உமக்குத் தெரியுமா? 10 கோடி மகம்மதியர் மாமிசம் சாப்பிடுகிறார்கள். ஒரு கோடி கிருஸ்தவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். 7 கோடி தீண்டாதார் என்கின்றவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். க்ஷத்திரியர் என்கின்றவர்களில் சிங்கு க்ஷத்திரியர், மராட்டா க்ஷத்திரியர், நாடார் க்ஷத்திரியர், வன்னிய க்ஷத்திரியர், நாயுடு க்ஷத்திரியர், செங்குந்த க்ஷத்திரியர் ஆகியவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். வைசிய வகுப்பார்களில் வாணிய வைசியர் மாமிசம் சாப்பிடுகிறார்கள். நாட்டுக்கோட்டை தனவைசிய வகுப்பார்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். வேளாளர்களில் கொங்கு வேளாளர்கள், கார்காத்த வேளாளர்கள், உடையார் வேளாளர்கள், மறவ வேளாளர்கள், படைத்தலைவேளாளர்கள், வடுக வேளாளர்கள், நாட்டார் வேளாளர்கள் ஆகியவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். திருநெல்வேலி, தஞ்சாவூரில் உள்ள சில வேளாளர்கள் அவர்களைச் சேர்ந்தவெளியில் உள்ள சிலர் தவிர மற்ற எல்லா வேளாளர்களும் மாமிசம் சாப்பிடுகிறார்கள். கடைசியாக பிராமணர்கள் என்பவர்களிலோ சௌராஷ்டிரப் பிராமணர்கள், விஸ்வப்பிராமணர்கள் சாலிய பிராமணர்கள், கொங்கிணி பிராமணர்கள், கவுடப்பிராமணர்கள், காஷ்மீரப் பிராமணர்கள், மச்சப்பிராமணர்கள், அம்பஷ்டப் பிராமணர்கள் முதலிய பல பிராமணர்களும் மாமிசம் சாப்பிடுகின்றார்கள். இந்தியாவில் இவர்கள் எண்ணிக்கைகளையெல்லாம் சேர்த்தால் குறைந்தது 15 கோடிக்குக் குறையாது. அடியோடு மாமிசம் சாப்பிடாதவர்கள் சுமார் 2 கோடி இருக்கலாமா என்பது சந்தேகம். 43 கோடியில் 2 கோடி அதாவது 100க்கு ஐந்து போகலாம். தவிர இந்தியர் தவிர உலகமக்கள் எல்லோரும் மாமிசம் சாப்பிடுகின்றார்கள். எனவே மொத்த ஜனத்தொகையில் 100க்கு 99½ பேர்களை ஜீவகாருண்ய மற்றவர்கள் என்று நீர் சுலபத்தில் சொல்லிவிட முடியுமா? சொல்லும் பார்ப்போம்.

சைவன்:- என்னங்காணும் பார்ப்பனரே! நீர் மாமிசம் சாப்பிடுகின்றீரே, இது யோக்கியமா? என்றால் ஊர்கதையெல்லாம் பேசுகிறீர்.

பார்ப்பனன்:- சொல்லுவதை கவனமாய்க் கேளும் சைவரே! வெறுங்கோபம் ஒரு காசுக்கும் உதவாது. அதெல்லாம் அந்தக் காலம். இது அறிவு ஆராய்ச்சி சையன்சு காலம் தெரியுமா? நான் மாமிசம் சாப்பிடக் கூடாது என்று நினைத்து வெகு நாளாய் சாப்பிடாதிருந்தது உண்டு. அது கூடாது என்றால் ஜீவ காருண்யத்தை உத்தேசித்து தானே ஒழியவேறில்லை பிறகு இத்தனைபேர்கள் மாமிசம் சாப்பிடுவதை கணக்குப் பார்த்து உலகத்தில் 100-க்கு 99½ பேருக்கு ஜீவகாருண்ணியமில்லாமல் இருக்குமா? இப்படி ஒரு கடவுள் மக்களைப் பிறப்பித்திருப்பாரா என்று யோசித்து, யோசித்து மயங்கிக் கிடந்தேன்.

கடைசியாக திரு. சர் ஜகதீச சந்திர போஸ், மரம், கொடி, செடி, புல் பூண்டு ஆகியவைகளுக்கு உயிர் இருக்கின்றது. அவைகள் தொட்டாலும், நாடினாலும், முறித்தாலும், பறித்தாலும் கஷ்டப்படுகின்றன. என்பதைக் கண்டுபிடித்த பிறகுதான், சரி, எது ஜீவ காருண்யம்? என்பதை ஆராயப் புகுந்தேன்.

காய்கறிகள் சாப்பிடுவதைவிட மாமிசம் சாப்பிடுவதுதான் அதிகமான ஜீவ காருண்யம் என்பதாக உணர்ந்தேன். எப்படி என்றால், உயிர் இருப்பதால் அது ஜீவனாகின்றது. ஜீவனை வதைத்துச் சாப்பிடுவது மாமிசமாகின்றது. ஆகவே, ஒரு செடியின் தழைகளைக் கிள்ளிப் பிடுங்கும்போதும், காய்களை அறுக்கும்போதும், கிழங்குகளைப் பறித்து வாடவைக்கும்போதும் அவைகள் படும்பாடு சித்திரவதைக்கு ஒப்பாகிறது என்று போஸ் சொல்லுகிறார். எனவே ஒரு ஜீவனை தினந்தினம் பல தடவை வதைசெய்து அதை துன்புறுத்தின்

றோம், என்பதை உணர நேரிட்டது. இப்போதும் அதை நினைத்தால் சகிக்க முடியாத துக்கம் வருகிறது. ஆனால் மாமிசம் அப்படியல்ல. ஒரு ஜீவனை சாப்பிடுவதனால் ஒரு தடவைக்கு மேல் யாரும் தொந்திரவு செய்யமாட்டார்கள். அதுவும் க்ஷணத்தில் முடிந்துபோகும். ஆதலால்தான் கிழங்கு, கீரை, காய், கறிகளைவிட மாமிசம் சாப்பிடுவது ஜீவகாருண்யமாகும் என்று சொன்னேன். ஆதலால் ஓய்! லசவரே! நான் உம்மை விட குறைந்த ஜீவகாருண்யமுடையவன் என்று எண்ணிவிடாதீர். தவிர திரு போஸ் காய்கறிகளுக்கு உயிர் இருப்பதை இன்று கண்டுபிடித்தார். ஆனால் மாமிசம் சாப்பிடும் மக்கள் வெகுகாலத்திற்கு முன்பே கண்டுபிடித்துத்தான் மாமிசம் சாப்பிடுகின்றார்கள் என்பதாகத் தெரிகின்றது. அன்றியும், வேதமும் மனுதர்ம சாத்திரமும் கண்ணப்பநாயனாரை ஒப்புக்கொண்ட சைவப் புராணங்களும் இதை அறிந்து தான் மாமிசத்தை அநுமதித்திருப்பதோடு மாமிசத்தை மறுக்கும் பிராமணன் இருபத்தொரு தலைமுறைக்கு நரகத்தை அடைவான் என்று மனுதர்ம சாத்திரமும், வேதமும் கூறுகின்றன தெரிந்ததா? சைவரே!

சைவன்:- ஓய் ஓய் பார்ப்பனரே! சரிதான் கடையைக் கட்டுங்காணும். உம் ஆராய்ச்சியையும், சயன்சையும், சாஸ்திரத்தையும், வேதத்தையும், புராணத்தையும் கோட்டை அடுப்பில் வைத்துக் கொளுத்தும். என்றைக்கு ஆராய்ச்சியும், சையன்சும் உலகத்தில் தோன்றிற்றோ அன்றே எல்லாம் கெட்டுது, கடைசியாக முழுமுதற் கடவுளான சிவன் தலையில் கை வைக்கவும் வந்து விட்டது. இந்தப் பாழும் அறிவும், ஆராய்ச்சியும், சயன்சும் என்றைக்கு ஒழியுமோ அன்று தான் சைவம் தழைக்கும். ஆதலால், இவை ஒழிய தவம் கிடப்போம். போம் போம். பார்ப்பானே போம். உம்மைப் பார்த்ததற்கும், உம் பேச்சைக் கேட்டதற்கும் கண்களையும், காதுகளையும் கழுவவேண்டும்.

பார்ப்பனன்:—அய்யா சைவரே! நன்றாய்த் தவம் கிடங்கள். அதுவும் திரு ஜகதீஸ் சந்திர போசும் இயற்கை ஆராய்ச்சியும், சுயமரியாதை இயக்கமும் ஒழியட்டும் என்று தவம் கிடங்கள். இதில் எது மீதியானாலும் உங்கள் சைவமும், உங்கள் ஜீவகாருண்யமும் சிறிது கூட நிலைக்காது. தவிர, என்னைப் பார்த்ததற்கும், என் பேச்சுக்களைக் காதில் கேட்டதற்கும் மகா பாதகந் தீர்த்த குளத்தில் போய்க் குளியுங்கள். கழுவினால் மாத்திரம் போதாது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# தீபாவளி கொண்டாடாத தீரர்கள்

—●—

## இதுவரை 6018 தோழர்கள்!

(திராவிடருக்கு இழுக்கு விளைக்கும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதில்லையென ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான தோழர்கள் கையொப்பங்கள் அனுப்பி வருகிறார்கள். இந்த ஆண்டும் அந்தப் பட்டியில் ஆயிரக்கணக்கான தோழர்களும், தாய்மார்களும், மாணவர்களும் சேர்ந்துள்ளனர். குடும்பத்தோடு கொண்டாடுவதில்லையென்றும் பலர் உறுதிமொழி அனுப்பியுள்ளனர். சென்ற வாரம்வரை 4000 பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. இடமின்மையாலும், பலர் கையெழுத்துக்கள் கண்டுபிடிக்க முடியாமலிருப்பதாலும் சுமார் 1000 தோழர்களின் பெயர்கள் மட்டுமே இந்த வாரம் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்கள், இவர்கள்!)

**காட்டூர்: (மருத்துவ சங்கம்)**

எம் நடேசன் வீ துளசிதாஸ் எஸ் வி காளிமுத்து எஸ் வி தங்கையன் எம் கே ராசு கே ஆர் மாரியப்பன் எல் சண்முகம் கே ரத்தினம் கே வி நாராயணசாமி டி கே சிவசுப்ரமணியன் ஆர் என் கருப்பையா.

**பொள்ளாச்சி:**

பி என் இராமானுசம் டி என் எசோதை அம்மாள் பி என் ஆர் சாவித்திரி அம்மாள் எத்திராசலு அம்மாள் அழகிய மணவாளர் நல்லையா நடராசுசெட்டி என் இராமலிங்கம் ஆ தி அருணாசலம் எஸ் தியாகராசன் பி ராமசாமி நாயக்கர் பி நாராயணசாமி நாயக்கர் ம குமாரசாமி டாக்டர் என் எஸ் சுந்தரம் என் இராமநாதன் எஸ் கே சாமி ஆர் ஆறுமுகம் பி எம் சுந்திரம் திருமலைசாமி எஸ் இரங்கசாமி பண்டித திருமூர்த்தி நாச்சிமுத்து ஆர் ஆறுமுகம் வி எஸ் கிருட்டினசாமி தங்கமுத்து கே நஞ்சப்பன் நடராசன் தி இராமானுசம் அம்மாள் ஏ கே கோவிந்தன் ஏ கே ஜி சின்னியம்மாள் எஸ் மாணிக்கம் பி நடராசன் பி ஆறுமுகம் பி வி செந்தில் நாயகம் தி முருகேசன் எஸ் பங்காருசாமி நாயுடு கே எஸ் கிருஷ்ணசாமி மா கருப்பசாமி ஏ வி கிருஷ்ணமூர்த்தி என் முனியப்பன் கே கந்தசாமி முத்துசாமி ஆர் ஆறுமுகம் வெ சுப்பைய நாயக்கர் க சண்முகம் ஆ பழனியப்பன் பி கே ராசப்பன் கே நடராசன் பி கே நடராசு முராதா கிருட்டினன் எஸ் கவுண்டப்பன்.

**நுங்கம்பாக்கம் சென்னை:**

அ ராஜலிங்கம் பா முத்துக்குமரன் சின்னா பாலசுந்தரம் சுந்தரமூர்த்தி ஆர் சிதம்பரன் டி வி ஆறுமுகம் டி சுப்ரமணியன் மு கிருட்டினன் தீ ரத்தினசபாபதி டி கே முத்து டி வடுவாம்பாள் தி நடராசன் அ தேவர்சிங்கம் ப தணியாசலம் ச துரைசாமி டி சுந்தராம்பாள் பி சரவணன் மு அ தடக்கண்ணி சி முருகேசன் வ ரத்தினம் பா சௌந்தரராசன் வ சங்கரநாராயணன் செ செங்கல்வராயன் பெரியநாயகி எஸ் எஸ் ராமசாமி நங்கோரன் எஸ் ஏமநாதன் டி எஸ் கிருஷ்ணசாமி பா செல்வராஜ் திரு வேங்கடம் சுந்திரராஜ் டேனியல் தமிழாசிரியர் சிதம்பரம் வே செல்வராசன் கோவிந்தராசலு முருகேசன் கே நாராயணன் முத்தையன், வெங்கடாசலம் கு சண்முக சுந்தரம் என் ஜானகி ராமன் டி கோபால கிருஷ்ணன் ஏ கேசவன்.

**சென்னை (மாணவர்கள்):**

தி ச மன்னார்மணி என் ஜானகிராமன் ஆர் ராசகோபால் வித்வான் சின்னப்பா ந பெருமாள் பி இ டி கிருஷ்ணன் பாலகிருஷ்ணன்.

**கீரம்பூர்:**

வ வீரப்பன் மா வெ பெரியசாமி ப துரைசாமி மு ஆறுமுகம் பெ மருதை அ ரெங்கசாமி பி செல்லமுத்து ம அங்கமுத்து ஆ அரப்பளி செ காளிமுத்து மு பன்னீர்செல்வம் மு மருதமுத்து கு மாரிமுத்து அ அண்ணாதுரை அ தங்கவேலு கு சுப்பையா கருப்பண்ணன் ந பெரியசாமி வீ வன்னிமுத்து ப முத்தையா அ கருப்பண்ணன் ஆ ஒயிலக்கவுண்டர் கீ தாதன் தா கோவிந்தன் கா துரைசாமி செ நல்லசெல்வம் தா மகாலிங்கம் ந வீரப்பன் கா நல்லசெல்வம் ஆ கந்தசாமி ப ம்ருதமுத்து த பிச்சமுத்து மா சிவாலிங்கம் மு வையாபுரி அ தாண்டவன் பெ துரைசாமி கி முத்தழகன் ம பெரியசாமி ந அங்கமுத்து மருதமுத்து மருதை ரெங்கசாமி.

**திருச்சி:**

டி பி முத்துசாமி டி டி அகிலாண்டம்பிள்ளை பி ராகவன் வி வாசு

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# அண்ணாமலைக்கு அரோகரா!

—‡—

(மூனாகானா)

ஓய்! நீல வர்ணம்! என்னிடம் ஸ்ரீகோட்டாதே உன்பெருமையை! எங்கேயாவது ஆழ்வார் வர்க்கம் இருந்தால் அங்கே போய்க் காட்டும். சிருஷ்டி கர்த்தாவிடமா சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொள்கிறாய். சபாஷ்!"

"ஓய்! பல தலை! வீண்ஜம்பம் அடிக்காதீர். உமது பெருமையை மற்ற தலைகளிடம் சொல்லிக் களிப்படையும். வைகுண்ட வாசனிடமா வீராப்பு! வெகு நன்று!"

"ஆத்திரப்பட்டு ஆடாதே தம்பீ! நீ மோகினி உருவம் எடுத்து சிவனோடு கலவி செய்த காரணத்திற்காக உனக்கு மதிப்பு தர முடியாது!"

"மகளையே காதலித்து, காடியைக் கூடிய மகானுபாவரே! மூடும் உமது நாலு வாய்களையும்! எனது சங்கின் முழக்கத்திலே—சக்கரத்தின் வீச்சிலே வீழ்ச்சி பெறுவாய். நினைவிருக்கட்டும்."

தேவலோகத்திலே - ஆமாம் - மனிதரினும் மேம்பட்ட முப்பத்துமுக்கோடி தேவர்கள் வாழும் புண்ய பூமியிலே ஒரு சச்சரவு! யாருக்கும் யாருக்கும்? சாட்சாத் பிர்மாவுக்கும் விஷ்ணுவுக்குந்தான்! சிருஷ்டி கர்த்தாவுக்கும், ஸ்ரீயப்பதிக்கும் ஏற்பட்ட சச்சரவில் நடந்த சம்பாஷணை இது. இதன் சாரம் என்ன? யார் பெரியவர் என்பது! படைப்புத் தொழில் புரியும் பிரமன் பெரியவனா? காத்தல் வேலை செய்யும் விஷ்ணு பெரியவனா என்ற தர்க்கம் முற்றுகிறது. இவர்களுடைய சண்டையில், இவர்களுடைய தனிப்பட்ட நடவடிக்கைகளின் சாயம் வெளுத்ததே தவிர தீர்ப்புக் கிடைக்கவில்லை. தேவலோகத்திலா? அதுவும் தேவாதி தேவர்களுக்குள்ளா சண்டை என்று சந்தேகம் ஏற்படலாம். தேவர் உலகத்தில் சண்டைமட்டுமல்ல வழக்குகள் பல வண்டி வண்டியாக உண்டு! அங்கு மாத்திரம் கோர்ட்டுகள் ஏற்படுத்தி விசாரணை நடத்தியிருந்தால், பரமசிவன் தாருகாவனத்து ரிஷி பத்தினிகளைக் கற்பழித்த வழக்கு, பிருந்தையை விஷ்ணு பலாத்காரம் செய்த வழக்கு அகல்யையை இந்திரன் கற்பழித்த வழக்கு, சப்தகன்னியரை அக்னி பகவான் சூறையாடிய வழக்கு, குரு பத்தினியை சந்திரன் கூடிய வழக்கு, எண்ணாயிரம் சமணரை சம்பந்தர் கழுவேற்றிய கொலை வழக்கு, இன்னோரன்ன வழக்குகள், கருவழித்த குற்றங்கள், திருட்டுக் கேசுகள் முதலியன நடைபெற்று தீர்ப்புகள் வந்திருக்கும். பூலோகத்தில் இறந்து சொர்க்கத்திற்குச் செல்லும் வக்கீல்களுக்கும் அங்கு நல்லசான்சு கிடைத்திருக்கும்.

மேற்கண்ட விழக்குகளில் ஒன்றாகத்தான் பிர்மனுக்கும் விஷ்ணுவுக்கும் "யார் பெரியவன்" என்ற வழக்கு ஆரம்பமாயிற்று! இதைத்தீர்த்துவைக்க சிவனார் வந்து சேர்கிறார். வழக்கை விசாரிக்கிறார். தீர்ப்புகூறுவது சங்கடமாகி விடுகிறது. உடனே ஆகாயமளாவ ஜோதியாகக் கிளம்புகிறார். அந்த ஜோதியின் முடியை ஒருவரும், அடியை ஒருவரும் கண்டு திரும்பவேண்டும். யார் முதலில் திரும்புகிறாரோ அவரே, பெரியவர் என்றுசிவனார் முடிவுகூறிவிடுகிறார். முடியை நோக்கி பிர்மா அன்னப்பறவை உருவில் பறந்தார். பன்றி உருவமெடுத்து அடியைக்காண பரந்தாமன் பாதாளத்தைக் குடைய ஆரம்பித்தார். இருவரும் வெற்றியை அணுகமுடியவில்லை. மேலே பறந்துகொண்டிருக்கும் பிர்மாவுக்கு எதிரில் ஒரு தாழம்பூ மேலே இருந்து கீழே வந்துகொண்டு இருந்தது. "ஓ! தாழம்பூவே எங்கிருந்து வருகிறாய்" என்றார் பிரம்மா. "சிவபெருமானின் சடாமுடியிலிருந்து வருகிறேன்" என்றது தாழம்பூ!

"நான் சிவனின் முடியைத் தேடிப் போகிறேன். என்னால் அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. நான் அவரது முடியைக் கண்டுவிட்டதாக ஒரு பொய் சாட்சி சொல்லுகிறாயா" என்று கெஞ்சினார் பிர்மா?

பொய் சாட்சி சொல்லத் தாழம்பூ ஒத்துக்கொண்டது. அதன்படி சிவனிடம் சென்று நான் முடியைக் கண்டுவிட்டேன் என்று பிர்மா கூறினார். அதற்குத் தாழம்பூ, ஆம் நானும் பார்த்தேன் என்று சாட்சியம் கூறிற்று. பாதாளத்தை நோக்கிப் பன்றி உருவிற் சென்ற விஷ்ணு நாரத முனிவரை சந்தித்துத் தன் முயற்சியில் வெற்றியடைய முடியாது என்பதைத் தெரிந்து கொண்டு தோல்வியோடு திரும்பினார். பரமசிவன், பிர்மாவும் தாழம்பூவும் பொய் கூறியதைக் கண்டுபிடித்து அவர்களுக்கு சாபம் அளித்தார். இதிலிருந்து பிர்ம, விஷ்ணுக்களின் கர்வம் அடங்கியதோடு, சிவனே யாவரிலும் பெரியவர் என்ற தீர்ப்பும் கூறப்பட்டது. சண்டையிட்டவர் வெட்கித் தலை குனிந்தனர்.

இது அருணாசல புராணம். தீப ஒளித் திருவிழா நடக்கப்போகிற திருவண்ணாமலை ஸ்தலத்தின் திருப்புராணத்தில் காணப்படும் ஆபாசங்களில் இதுவும் ஒன்று! அண்ணாமலையில் நாளை நடக்க இருக்கும் கார்த்திகை தீபத்திற்குப் பலப்பலஐதீகங்கள் உண்டு! சிவன் சில அசுரர்களை நெற்றிக் கண்ணால் எரித்துவிட்டதாகவும் அதுவே சொக்கப்பானைத் திருநாள் என்றும் ஒரு புராணம் கூறுகிறது. மற்றொரு புராணத்தில் அக்கினிதேவன், சப்த கன்னியரைக் காமுற்றதாகவும் அதைக் கண்ட அவன் மனைவி சுவாகா தேவி அருந்ததி கற்புடையவளானதால் அவள் உருவத்தைத் தவிர மற்ற ஆறு கன்னிகைகளின் உருவத்தை எடுத்து அக்கினி பகவானின் ஆசையைத் தீர்த்ததாகவும், அந்த ஆறு உருவங்களும் கார்த்திகைப் பெண்களாகி அவர்கள் முருகனுக்குப் பாலூட்டியதால் முருகனுக்கு கார்த்திகேயன் என்ற பெயர் ஏற்பட்டதாகவும், பிறகு அந்தப்பெண்கள் கார்த்திகை நட்சத்திரங்களாக மாறியதாகவும் அதுவே கார்த்திகை விரதத்திற்குக் காரணமென்றும் மற்றொரு புராணம் சொல்லுகிறது. மாபலி சக்கரவர்த்தி பற்றிய மற்றொரு புராணமும் உண்டு!

இம்மாதிரியே, இந்த நாட்டில் நடைபெறும் பண்டிகைகளுக்கும், உற்சவங்களுக்கும் ஆயிரக்கணக்கான—ஒன்றுக்


## "புது உலகம்"

(சித்திர, செய்தி வாரப்பத்திரிகை)

இரு வர்ணங்களில், புதிய பாதையில், அபாரமுறையில். (ஏராளபடங்களுடன்) 2-12-45 அன்று வெளிவரும். தனிப்பிரதி விலை அணு 0-1-6 எல்லா இடங்களிலும், டிபாசிட் கட்டக்கூடிய, விற்பனை

ஏஜெண்டுகள் தேவை

குறிப்பு:- அச்சடித்த அறிகுறி பிரதிக்கும், ஏஜென்ஸி நிபந்தனைகளுக்கும்:-

"புது உலகம்" ஆபீஸ்,
77 B, ஹாரிஸ் ரோடு, மவுண்ட்ரோடு, சென்னை.

கொன்று முரண்பட்ட கதைகள் எழுதப் பட்டிருக்கின்றன. அந்தக் கதைகளில் யாராவது ஒரு அசுரன் கொல்லப்பட்ட செய்தியும், அல்லது தேவர்களுக்குள் நடந்த அற்பத்தனமான, ஆபாசமான தகாறும் அதுவுமில்லையானால் ஒரு வஞ்சகத்தையும், விபசாரத்தையும் வளர்க்கும் புராணமும் காணப்படுமேயல்லாது, சிறிதாவது அறிவுக்குப் பொருத்தமான, ஒழுக்கமான நிகழ்ச்சிகளைக் காண முடியாது. இவைகளை சிந்தித்துப் பார்க்க இந்நாட்டு மக்களுக்கு நேரமோ, நினைப்போ இருப்பதில்லை. எதையெடுத்தாலும் முன்னோர்கள் வார்த்தை என்ற முலாம் பூசப்பட்டு பழக்கவழக்கம் என்ற பசப்பு மொழி பேசப்படுகிறதே தவிர மனிதராக வாழ முயற்சிப்பதே கிடையாது!

இம்மாதிரி ஆபாசக் கதைகளின் பேரால் மாதத்திற்கொரு பண்டிகை! மாதத்திற்கொரு உற்சவத் திருநாள்! அதற்காக பல ஆபாச ஆட்டங்கள்! ஆடம்பரமான செலவுகள்! கண்டவர் சிரிக்கும் காட்டுமிராண்டி நடவடிக்கைகள்! இவைகள்தான், ஞானத்தில் சிறந்து சுதந்திர தாகமெடுத்து சுயராஜ்யத்திற்கு ஏன்? பொது உடமைக்கும் தயாரான சூரர்கள் வாழ்வதாகச் சொல்லப்படும் இந்த நாட்டிலே நடைபெறுகின்றன!

பாட்டாளி மக்களின் பச்சைக் குழந்தைகளின் வரண்ட தலைக்கு ஒரு துளி எண்ணெய் கிடையாது. திருவண்ணாமலைத் தீபத்திற்கு ஆயிரக்கணக்கான நெய் டின்கள் உடைக்கப்படுகின்றன. மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள இந்த நாட்டு மாதர்களுக்கு ஒருமுழத் துணி கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆனால் அண்ணாமலை தீபத்திற்குப் பீஸ் பீஸாகத் துணிகள் கொளுத்தப்படுகின்றன. பசித்த மக்களுக்கு ஒரு பிடி சோறு கிடையாது. ஆனால் அந்தப் பரமபிதாவுக்கு அன்னாபிஷேகம் நடைபெறுகிறது. இங்கு வறுமையால் வாடும் மக்களுடைய வயிறு எரிகிறது. அங்கு, அண்ணாமலையில் ஆடம்பரத்தோடு அறியாமை நெருப்பு எரிகிறது. அதற்கு நெய் வார்க்கப்படுகிறது. அந்தோ! கொடுமை! கொடுமை!

திராவிட மக்களுடைய உணர்வுக் கழனியிலே அறியாமையை நீராகப் பாய்ச்சி, மூடப் புராணீகப் பழக்கவழக்கங்களை பயிராக வளர்த்து, அவ்வப்போது முளைக்கும் ஆராய்ச்சிகளைக் "களை" என்று கழறி, பயமெனும் அரிவாளால் களைந்து தங்கள் சுயநலத்துக்கேற்ற வசதிகளை விளைவாகப் பெற்று பிழைப்பை அறுவடை செய்து பார்ப்பனரும், பணக்காரரும், படித்தவரும் வாழ்கின்றனர். இவர்களுடைய ஒப்பந்தம் முறிந்து கூட்டுச் சுரண்டல் முறை ஒழியவேண்டுமானால் திராவிடர் தன்மானம் பெற வேண்டும். திருவண்ணாமலை தீபங்கள் அணைக்கப்படவேண்டும். அது வன்றி "அண்ணாமலைக்கு அரோகரா!" போட்டுக் கொண்டேயிருந்தால் பழைய கற்காலத்தை நோக்கிக் கட்டை வண்டிப் பிரயாணத்தை கட்டுசாத மூட்டையோடு ஆரம்பிக்கவேண்டியது தான்! உணர்வார்களா திராவிடர்கள்? உணர்ந்து ஆவன செய்வார்களா?

---

## மருத்துவருக்கு!

சமூகத்தோழர்களே! நமது சங்கம் ஆரம்பித்து 20 ஆண்டுகள் கடந்துங்கூட உருப்படியான வேலைகள் ஒன்றும் செய்யவில்லை. "அம்பட்டன்" என்ற பெயரை "மருத்துவன்" என்று மாற்றியது அரசாங்க கெஜட்டோடு நின்று விட்டதே ஒழிய சமூகப் பழைய நிலை மாறியபாடில்லை. ஆகவே திருச்சி மருத்துவவாலிபர்கள் பெரும்பான்மையோர் கொண்டுள்ள சலூன் தொழிலை கூடுமானஅளவு குறைத்து வசதியுள்ளவர் வைத்தியமும், மற்ற சமூகத்தாருடன் தொடர்புகொள்ளும் கைத்தொழில் உத்தியோகம் முதலியவைகளையும் கைக்கொள்ள வேண்டுமாய்க் கோருவதோடு ஆங்காங்கு கிராமம் நகரங்களிலுள்ள நமது மக்களின் கணக்கெடுத்து தலைமை நிலையத்திற்கு அனுப்புமாறு வேண்டி, (திருச்சி தஞ்சைரோடு, ஜெயபாரத விலாஸ்) தோழர் எம். ஆறுமுகம் எழுதுகிறார்.

---


## மணமகள் தேவை

சுமார் 25 வயதுள்ளவரும் நடுத்தரமான உயரமும், மாநிறமாய் உள்ள, நல்ல படிப்பும், தையல் வேலையில் மாஸ்டர் டெயிலரும், ஜவுளிக் கடையில் கூட்டாளருமான ஒரு மணமகனுக்கு ஒரு பெண் தேவை. பெண் சாதாரணப் படிப்புள்ளதாயும், அழகுள்ளதாயும், 16, 17 வயதுக்கு மேல்படாததாயும், நல்ல குணமுடையதாயும், அகம்படிய வகுப்பில் உள்ளதாயும் இருக்கவேண்டும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும். (போட்டோ இருந்தாலும் அனுப்பவும்) கடிதம் ரகசியமாய் வைத்துக் கொள்ளப்படும். சீர்திருத்த முறையில் திருமணம் செய்து கொள்ளப்படும்.

விலாசம்:

என். பி. காளியப்பன், C/o. கே. எம். வீராசாமி, ஜவுளிக்கடை, மதுக்கூர், பட்டுக்கோட்டை.

## ஏஜண்டுகள் தேவை


செல்வம் போட்டோ மார்க், சீயக்காய் பவுடர், பைசா காலணா பாக்கெட்களாய் கிடைக்கும். எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை. விபரங்களுக்கு,

T. செல்வராசன், செல்வம் & Co., பழக்கடைத் தெரு, நாகப்பட்டணம்.

80-வருட அனுபவம்
1872ஆம் முதல் ஆங்கில மருந்து முறையும் இணைப்பு

# குரு மருந்துகள்

பர்மா, சிலோன், மலேயா, தென்னுப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளிலும், இந்திய வட மாகாணங்களிலும் சிறப்புற்றவை.



(CHILDREN'S HEALTH SET)

## குழந்தைகள் பாதுகாப்புக்கு

1-செட் 7-மருந்துகள்

1. குரு கோரோஜனை மாத்திரை 0-12-0
2. குரு கஸ்தூரி மாத்திரை 0-12-0
3. குரு பாலர் வயிற்றோட்ட மருந்து 0-14-0
4. குரு வேப்பெண்ணை தைலம் 1-4-0
5. குரு K. சொட்டு மருந்து (கக்குவானுக்கு) 2-0-0
6. குருஜிமாகளிம்பு(கரப்பானுக்கு) 1-0-0
7. குரு பாலர் டானிக் 2-0-0

(வி. பி. பி. பிரத்தியேகம்)

விபரங்களுக்கு:—

டாக்டர்

எ. மதுரம் சன்ஸ்,

குரு மருந்து சாலை............

திருச்சினாப்பள்ளி (S. I.)

## நடக்க இருப்பவை!

திருவத்திபுரத்தில் வடஆற்காடுமாவட்டத் திராவிடர் கழக முதல் மாநாடு கூட்டுவது பற்றித் திட்டம் தயாரிக்க 20-11-45-ல் திருவத்திபுரத்தில் திராவிடர் கூட்டம் ஒன்று நடைபெறும்.

• •

30-12-45-ல் திருப்பத்தூர் (வ. ஆ.) திராவிட மாணவர் கழகத்தின் முதலாவதாண்டு நிறைவுவிழா தளபதி சி.என்.எ. தலைமையில் நடைபெறும். தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், அன்பழகன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

2-12-45-ல் திருவண்ணாமலை திராவிடர் கழக முதலாவது ஆண்டுவிழா தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெறும்.

• •

18-11-45-ந் தேதி திருச்சியில் நடக்க இருந்த மாகாண மாணவர் மாநாட்டு வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் 24-11-45ல் திருச்செங்கோட்டில் நடைபெறுமென செயலாளர் தோழர் இளம்வழுதி அறிவிக்கிறார்.

• •

18-11-45-ல் சீர[illegible] தோழர் [illegible]டியும் அல்நாகமுத்து அவர்கட்கு தளபதி சி.என்.எ. தலைமையில் திருமணம் நடைபெறும். அன்று மாலை பொதுக் கூட்டத்தில் தளபதி சி. என். எ. முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

19-11-45 மாலை விழுப்புரம் பாண்டி ரோடு துவரை மண்டிக் கருகில் முஸ்லிம் லீக் சார்பில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் தளபதி சி. என் எ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

• •

திருவல்லிக்கேணி மாவட்ட திராவிடர் கழகம் சென்னை. 18-11-45-ல் தன்மானம் என்னும் பொருள் பற்றி தலைவர் இல்லத்தில் விரிவுரை நிகழும்.

• •

ஈரோடு புகையிலை வர்த்தகர் சங்க முதலாவது ஆண்டுவிழா 18-11-45 ஞாயிறு காலை 11 மணிக்கு ஜனாப் டி. கே. ஈ. ஹாஜி அப்துல் கனி சாயபு தலைமையில் துவக்கப்படும். தோழர்கள் கே. கே. நீலமேகம், அப்துல் வகாப் சாயபு, சுந்தரம் பிள்ளை, மீனாட்சிசுந்தர முதலியார் பி. ஏ., எல். டி., ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

• •

19-11-45 திங்கட்கிழமைமாலை 5 மணிக்கு திருநயம் (திண்ணியம்) கிராமத்தில் திராவிடர் கழக பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் பேசுவார்கள்.

21-11-45 புதன்கிழமை காலை 10 மணிக்கு திருவாரூர் தெற்கு வீதி அருணகிரியார் நிலையத்தில் தஞ்சை ஜில்லா இசைவேளாளர் 4-வது மாநாட்டு வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். அதுகாலை சில முக்கிய விஷயங்களைப் பற்றி முடிவு செய்ய வேண்டியிருப்பதால் தாங்கள் தவறாது வந்து சேரக் கோரப்படுகிறது என பொதுக் காரியதரிசி தோழர் டி. என். லெட்சப்பா அறிவிக்கிறார்.

---

## கட்சி, மத—கலப்பு மணம் லூர்துமேரி--வெங்கிடாசலம் திருமணம்

11-11-45 மாலை 6-மணிக்கு ஈரோடு வெங்கிட்டநாயக்கர் சத்திரத்தில் கிருஸ்துவ மதத்தில் இருந்த சுயமரியாதைச் செல்வி லூர்து மேரிக்கும் "இந்து" மதத்தில் இருந்த கம்யூனிஸ்ட் செல்வன் [illegible] வெங்கிடாசல[illegible]ஜில்லா ரிஜிஸ்டரார் அவர்களால் மணம் பதிவு செய்யப்பட்டது. 200பேர்கள் வரை வந்திருந்தார்கள். மணமக்கள் இருவரும் தங்களுக்கு மதம் இல்லை என்று சொன்னார்கள்.

மணமக்களுக்கு, பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்தவர்களாலும், திராவிடமாணவர் கழகத்தினராலும் பல பரிசுகள், வரவேற்பு இதழ்கள் அளிக்கப்பட்டதுடன் தோழர் கோவிந்தசாமி முதலிய பலர் ஆசி கூறினார்கள்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் திருமணத்தில் உள்ள உடமைத் தத்துவம்பற்றிப் பேசினார்.

---

## S. I. L. F. தேர்தல் கூட்டம் சிரசாசனத்தில் முடிந்தது

முத்துப்பேட்டையில் திருத்துறைப் பூண்டியில் தேர்தலுக்கு நிற்கவேண்டுமென்று விரும்பிய சிலர் முயற்சியால் ஜஸ்டிஸ் கட்சியின் பெயரில் 17-10-45ல் ஒரு தேர்தல் கூட்டம் நடைபெற்றது. தோழர் அண்ணாமலை பிள்ளை சொற்பொழிவாற்ற வந்திருந்தார். கூட்டம் துவங்கியதும் திராவிடர் கழக செயலாளர் தோழர் ஆர். சாமிநாதன் எழுந்து திராவிடர் கழகமென்னும் ஜஸ்டிஸ் கட்சியின் பெயரால் இம்மாதிரி தேர்தல் கூட்டம் நடத்துவது தவறென்றும், திருச்சி தீர்மானத்திற்கு மாறானது என்றும் விளக்கியதோடு தான் கொண்டுவந்திருக்கும் 13-கேள்விகளுக்கும் தோழர் [illegible]லைப்பிள்ளை பதில் சொல்ல [illegible] கேட்டுக்கொண்டார். வேண்டுமென்றும் [illegible]ஜனார்த்தனம் தோழர் அண்ணாமலை பிள்ளை தனக்கு சிரசாசனம் தெரியுமென்றும், கேள்வி கேட்பவர் தலைகீழ் நின்று கேட்டால் தானும் தலைகீழ் நின்று பதில் சொல்ல முடியும் என்றும் கூறி சிரசாசனம் செய்யத் துவங்கிவிட்டார். சிரிப்பும் சீற்றமும் எழவே கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

---

மலேயாவிலுள்ள ஒரு அதிகாரியிடமிருந்து கிடைத்த
7-10-45ந் தேதி கடிதத்தில் காணப்படும் குறிப்புகள்:
"வேறு எதையும் விட நமக்கு மிகவும் தேவையானது
"சௌகரியங்கள்"—மிக அவசரமாக!
இந்தத் தேவையைத்தான்
**மே. த. கவர்னரின்**
கஷ்ட நிவாரண சகாய நிதி
பூர்த்திசெய்ய முயற்சிக்கிறது. அதற்கு உதவி
அவசரமாக தேவை.
எனவே
★
"கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு" என்று குறிப்பிட்டு
"ஹானரரி டிரஷரர், மே.த. கவர்னரின் கஷ்ட நிவாரண சகாயநிதி,
C/o இம்பீரியல் பாங்க், இந்தியா" என்ற விலாசத்துக்கு
தயவு செய்து பணம் அனுப்பி உதவுங்கள்.

குடி அரசு

1945-ஞு நவம்பர் மீ 17-உ

# கறுப்பு சட்டைப் படை

கறுப்பு சட்டைப்படை என்பதாக ஒரு படை ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக தமிழ்நாட்டில் திரட்டப்படுவது பற்றி பலருக்கு கிலி ஏற்பட்டு அந்தக்கிலியை பரிகாசம் செய்வதன் மூலமாக பல இடங்களில் காட்டி வருகிறார்கள்.

நாட்டில் அரசியலின் பேராலோ மதத்தின்பேராலோ, சமுதாயத்தின்பேராலோ ஏற்பட்டிருக்கும் ஒவ்வொரு கட்சியாரும் அக்கட்சித் தொண்டாற்றுவதற்கு என்று ஒவ்வொரு படையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. "ராமதண்டு" "அனுமான் சைனியம்" "செஞ்சட்டை" "நீலச்சட்டை" "இந்துஸ்தான் சேவாதளம்" என்பனபோன்ற பல படைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பற்றியெல்லாம் எவரும் ஏதும் பேசாமல் இருந்துவிட்டு கறுப்பு சட்டைப்படை என்பதற்குஆக மாத்திரம் ஏன் இத்தனைபேர்கள் பரிகாசம் செய்யவும், சாடை பேசவும், (கேலிச் சித்திரம்) பொம்மை போட்டுக் காட்டவுமான காரியங்கள் செய்கிறார்கள் என்பது விளங்கவில்லை. எப்படி இருந்தபோதிலும் கறுப்பு சட்டைப்படை என்பது மற்றப் படைகளைவிட மக்கள் கவனத்தை அதிகமாக கவர்ந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை என்பதோடு அதற்கேற்றபடியே மக்கள் கவனத்தை ஆழ்ந்து செலுத்தும்படியான அளவுக்கு கறுப்பு சட்டைப் படை வேலை செய்யப் போகிறது என்பதிலும் அய்யமில்லை.

கறுப்புசட்டைப் படை அரசியலில் ஏதாவது தீவிரக் கிளர்ச்சி செய்யவோ, ஓட்டுப் பெறவோ அல்லது ஏதாவது ஒரு வகுப்பு மக்கள் மீது வெறுப்புக் கொண்டு யாருக்காவது தொல்லை கொடுக்கவோ, அல்லது நாசவேலை செய்து நம் மக்களையே பலிகொடுக்கவோ, நம் பொருளையே பாழாக்கிகொள்ளவோ அல்ல என்பதைத் தெளிவாக வலியுறுத்திக் கூறுவோம். மற்றபடி அப்படை எதற்கு ஆக என்றால் இழிவுகொண்ட மக்கள் தங்கள் இழிவை உணர்ந்து வெட்கமும், துக்கமும் அடைந்திருக்கிறார்கள் என்பதைக்காட்டவும் அவ்விழிவை நீக்கிக்கொள்ள தங்கள் வாழ்வை ஒப்படைக்கத் தயாராய் இருக்கிறார்கள் என்பதைக் காட்டவும் அதற்கான முயற்சிகளைச் செய்யத் தலைவர் கட்டளையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டவுமே ஏற்படுத்தப் பட்டிருப்பதாகும்.

கறுப்பு சட்டைப் படை என்கின்ற பெயர் சிலருக்கு இழிவாக இருப்பதாகக் காட்டப்படுகிறது. அனுமான் படை, வானர சைனியம் என்று சொல்லப்படுவதை மனிதக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் பெருமையாகக் கருதிபொறுத்துக்கொண்டிருக்கும்போது கறுப்பு சட்டைப் படை என்பது மாத்திரம் மக்களுக்கு எந்தவிதத்தில் இழிவாகக் கருதப்படுகிறது என்பது நமக்கு விளங்கவில்லை. சிலரால் கறுப்பு சட்டை பார்வைக்கு அசிங்கமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பகுத்தறிவுள்ள மக்கள் உச்சிக் குடுமியும், மழுங்கச் சிரைத்த தலையும், பட்டை நாமமும், சாம்பல் பூச்சும், தொப்பை வயிறு தொப்புள் குழியுடன் தெரியும்படியான பஞ்சகச்சமும்; சூத்திரன் என்று ஒரு சாதியும், பார்ப்பான் என்று ஒரு சாதியும், பறையன் சக்கிலி என்று ஒரு சாதியும் அதற்கு ஒவ்வொரு மாதிரி அடையாள வேஷமும் கொண்டு அவற்றை அந்தந்தமக்களும் ஏற்றுக்கொண்டு நடக்கும் காட்சியைவிடவா கறுப்பு சட்டை அசிங்கமாகவும் கேலியாகவும் இருக்கக்கூடும்? என்று கேட்கிறோம்.

மற்றும் கன்னான் வார்த்துக்கொடுத்த செம்புப் பொம்மைகளை சுவாமிகள் என்று சொல்லி அதை வண்டியில் வைத்து வாத்தியத்துடன் இழுப்பதும், அதற்கு கல்யாணம் காரியாதி செய்வதும் பிள்ளைகுட்டிகள் இருப்பதாகக் காட்டுவதும் சோறு பலகாரம் படைப்பதும் ஆன முட்டாள்தனமான காரியங்களைவிடவா கறுப்பு சட்டைக்காரர்கள் மக்களுக்குக் கேலிக்கிடமாய் நடந்துகொள்ளுகிறார்கள் என்று சொல்ல முடியும்? என்று கேட்கிறோம்.

இந்த நாட்டில் உண்மையான முட்டாள்தனத்தையும், காட்டுமிராண்டித் தனத்தையும், சுயநல சூழ்ச்சிக்காரர்கள் மக்களுக்குள் கடவுள், மதம் என்னும் மயக்க வஸ்துக்கள் பேரால் புகுத்தி மடையர்களாகவும், மானமற்றவர்களாகவும் இழிவுப்படுத்தி வைத்திருக்கும் காரியங்களைப் பற்றி இந்நாட்டு மக்கள் சிறிதும் கவலையும் இல்லாமல், மானஉணர்ச்சியும் இல்லாமல் பொறுத்துக்கொண்டு, பின்பற்றி வந்த காரணத்தாலேயே அவைகளை ஒழிக்கவோ, அவ்விழிவுகளிலும், மடமையிலும் இருந்து வெளிவரவோ எவராலாவது செய்யப்படும் முயற்சிகளையெல்லாம் அம் முயற்சியின் எதிரிகள். பரிகாசம் செய்தும், பழிசுமத்தியும், குறும்புப் பிரசாரம் செய்தும், மற்றும் பல வழிகளில் வஞ்சகம், துரோகம், பலாத்காரம் முதலியவைகளைச் செய்தும், அடக்கிவைத்தும், ஒழித்தும் வந்திருக்கிறார்கள். அதுபோலவே திராவிட மக்களின் இழிவையும், மடமையையும் நீக்க இன்று முன் வந்திருக்கும் கறுப்பு சட்டைப் படையைப்பற்றி எதிரிகள் கேலிசெய்து பழிசுமத்தி குற்றம் கற்பிப்பது இப்போது அதிசயமல்ல என்போம்.

வெள்ளைக்காரனை ஓட்டுவது என்று பெயரை வைத்துக்கொண்டு அதற்குஆக என்று ராட்டினம் சுற்றுவதும், வெள்ளையனை ஓட்டும் படை (தேசிய வீரன்) என்று பெயர்வைத்துக்கொண்டு கோணிச் சாக்கை (கதர் துணியை) கட்டிக்கொண்டு குரங்கு குல்லாயை (கதர் குல்லாயை) தலையில் மாட்டிக்கொண்டு திரிகிறதுமான பைத்தியகாரத்தனத்தைவிட, ஆபாசக் காட்டுமிராண்டி செய்கையை தோற்றத்தைவிட, கறுப்புசட்டை போட்டுக்கொண்டு இருப்பது எந்தவிதத்தில் ஆபாசமாகவும், பைத்தியகாரத்தனமாகவும் ஆகிவிடும் என்பது நமக்குவிளங்கவில்லை.

மனிதனுக்கு மானம் பிரதானமே ஒழிய "அழகு" பிரதானமல்ல. அழகு என்பது நாம் ஏற்படுத்திக் கொள்வதாகும். நம் பெண்கள் ஆபாசமாய் வேஷம் போட்டுக் கொள்ளுவதை, காதிலும், மூக்கிலும் ஓட்டைகள் போட்டுக் கொள்ளுவதை, அதில் விகாரமாய் "நகைகள்" என்று கண்ட கண்டவைகளை மாட்டிக் கொள்ளுவதை அழகென்கிறோம். அப்படி இல்லாமலிருப்பதை அசிங்கமாக இருப்பதாகக் காண்கிறோம். ஆனால் மானமும், மடமையும் நாம் ஏற்படுத்திக் கொள்ளுவதல்ல. நமக்கு இயற்கையாகவே அவை அறியப்படக்கூடியவைகளாகும்.

எனவே கறுப்பு சட்டையைப் பற்றி மற்றவர்கள் (நம் எதிரிகள்) கேலி செய்கிறார்கள் என்று படை வீரர்கள் யாரும் கருதி விடக் கூடாது என்பதோடு நிர்ப்பந்தமாக ஏற்படக் கூடிய சமயம் தவிர மற்ற சமயங்களில் கறுப்பு சட்டை மாத்திரமல்லாமல் கறுப்பு உடை அதாவது வேஷ்டியும் அல்லது பைஜமா என்னும் கால் சட்டையும்கூட கறுப்பாய் இருந்தாலும் நலமேயாகும். சட்டைகளை கறுப்பு சட்டைப் படை ஸ்தாபனத்தில் இருந்தே விலைக்கு சப்ளை செய்ய முயற்சிகள் நடந்து வருகின்றன.

பெண்களும் இப்படையில் சேரலாம். அவர்கள் கறுப்பு சேலை அல்லது குறைந்த அளவு கறுப்பு ரவிக்கையையே சதா அணிந்து கொள்ள வேண்டும். கூடுமான வரையில் நகைகளை வெறுத்துத் தள்ளவேண்டும்.

இன்று நம்மைப் பரிகாசம் செய்கிறவர்கள் நம்மைப் பார்த்துப் பொறாமைப்படும்படியான அளவுக்கும், நம்மைப் போல் அவர்களும் காப்பி அடிக்கும்படியான அளவுக்கும் நாம் வேலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம், வேலை செய்யவும் போகிறோம். இதற்கு ஆக நாம் ஒவ்வொருவரும் குடும்பம்—வாழ்வு என்பவைகளை துச்சமாகக்கருதவேண்டியவர்களாக இருக்கிறோம். இன்று தோன்றியுள்ள இந்த திராவிடர் கறுப்பு சட்டைப் படை இயக்கம் 'பொதுநல' வாழ்வின் பேரால் தொப்பை வளர்க்கவோ,

# கறுப்பு சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கறுப்பு சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப் படுவார்கள். பெண்களும் சேரலாம். ஆதலால் அதில் சேர சம்மதமுள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தந்தை பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

யோக்கியதைக்கு மேற்பட்ட சுக வாழ்வு வாழவோ ஏற்பட்டதல்ல, அப்படிப்பட்டவர் என்று சந்தேகிக்கப்பட்ட நேர்ந்த எவருக்கும்கூட திராவிட இயக்கம் இடம் கொடுத்தால் இயக்கம் தற்கொலை செய்து கொள்ள சம்மதித்தது போலாகும்.

இயக்கத்திற்கு தொண்டாற்றுவதில் எவரும் தன்நலத்தை சிறிதாவது விட்டுக்கொடுக்கத் தயாராகவும், தனது மானாவமானத்தைக் கூட லட்சியம் செய்யாமல் இயக்கத்திற்கு தலைகொடுக்கக் கூடியவர்களாகத் துணிவுகொள்ளவேண்டும். விளம்பரத்திற்கும், சுயநல வாழ்வு மேம்பாட்டிற்கும் என்று கருதி இயக்கத்தை ஏணிபடிக்கல்லாக உபயோகிக்கக் கருதுபவர்கள் திடீர் என்று கவிழ்க்கப்பட்டு விடுவார்கள் என்பதை மனதிலிறுத்திக் கொண்டு இதில் கலக்க வேண்டும். உண்மையான இயக்கத்தில் இது இயற்கை. ஆதலால் சொந்த வெட்கம், மற்றவர்கள் செய்யும் பரிகாசம், விஷமத்தனமான போதனை ஆகியவைகளுக்கு கறுப்பு சட்டைக்காரர்கள் சட்டைசெய்து காதுகொடுக்கக் கூடாது என்பதை நன்றாய் வலியுறுத்திக் கூறுகிறோம்.

அடுத்தமாதம் சென்னையில் கூடும் நிர்வாகக் கமிட்டிக்கூட்டத்தில் கறுப்பு சட்டை விதிகள் மற்ற விபரங்கள் தெளிவு படுத்தப்படும்.

இப்போது படைவீரர்கள் தங்கள் கழுத்து அளவு, மார்பு அளவு, உயரம் முதலியவைகளை தெரிவிக்கவேண்டும். சட்டை 1க்கு ரூ. 1-12-0 அல்லது 2-க்குள் விலையாகலாம். சட்டை தேவை உள்ளவர்கள் எவ்வளவு வேண்டும் என்பதையும் எழுத வேண்டுகிறோம்.

---

## கிருஷ்ணன்— பாகவதர்

நகைச்சுவை அரசு கிருஷ்ணனும், இசை உலக ஜோதி பாகவதரும் சிறையில் இருக்கிறார்கள். அவர்கள் உயிர் இப்போது எப்படி துடித்துக்கொண்டும், உள்ளம் எவ்வளவு துயரத்தில் மூழ்கி வேதனைப்பட்டுக் கொண்டும் இருக்கும் என்பதை உள்ளபடி எடுத்துக்காட்ட எவராலும் முடியாது என்றாலும், "அவ்விருமணிகளுக்கும் மறுமணிகள் இனி யார்?" என தமிழ்மக்கள் ஏங்கித் தவித்துக்கொண்டு இருப்பதை சரியானபடி விளக்கிக்காட்டுவது அதனிலும் முடியாத காரியமேயாகும்.

சரி இவை நடந்துவிட்ட காரியம். இனி நடக்கும் காரியத்தை அதாவது இத்துயரத்தையும்

துன்பத்தையும் தீர்த்துக்கொள்ள அவ்விரு மணிகளையும் வெளியாக்கிக் கொண்டுவரவேண்டிய காரியத்தைப் பற்றி யோசித்து ஆவனசெய்யவேண்டியதே அறிவுடையோருடையவும் அவர்களைப்பற்றிய ஆவலுடையோருடையவும் தவிர்க்கவொண்ணாக் கடமையாகும்.

பாகவதர், கிருஷ்ணன் தனித்தனி மனிதர்களானாலும் அவர்கள், அவர்களுடைய, அல்லது அவர்கள் மக்கள் மனைவிகள் சுற்றம் உறவினர், அவர்களால் பிழைக்க வாழும் மக்களின் மனிதர்களல்லாத தமிழ் மக்களின்— தமிழ் மக்களுக்கே சொந்தமான மணிகளாவார்கள். இதை ஒவ்வொரு தமிழனும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இன்று தமிழ்நாட்டில் இணையில்லா பேறு பெற்ற தமிழர்களின் செல்வங்களாவார்கள். ஆதலால் இவர்களை விடுதலை செய்யும் முயற்சியை அவர்கள்(கிருஷ்ணன்-பாகவதர்) சொந்த சுயநல முயற்சியாய்க் கருதாமல் தமிழர்களின் பொதுநல முயற்சியாகக் கருத வேண்டுமென்று வலியுறுத்துகிறோம். இதற்கு ஆக ஒரு பொதுக் கூட்டம் சடுதியில் கூட்டப்பட வேண்டும். அதில் ஒரு செல்வாக்கான கமிட்டி நியமிக்கப்பட வேண்டும். நிதி திரட்டவேண்டும்.

முனிசிபாலிட்டி ஜில்லா போர்டு, யூனியன் போர்ட் ஆகியவைகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். கலைவாணர்கள் கூட்டம் உறங்கிக் கிடக்காமல் தக்க முயற்சி செய்து தக்கதொரு நிதி திரட்டவேண்டும்.

திருச்சியில் 11ந்தேதி தோழர் வேதாசலம் அவர்களால் தோழர் சங்கரன் தலைமையில் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு பலர் ஆதரவு அளித்திருப்பது குறித்து மகிழ்ச்சி எய்துகிறோம்.

## கோவை மாவட்ட திராவிடர் கழகம் ஈரோடு

டிசம்பர் முதல் வாரத்தில் கோவை மாவட்ட திராவிடர் கழக 2 வது ஆண்டு விழா ஈரோடு சரஸ்வதி ஹாலில் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆக்க வேலைகள் நடைபெறுகின்றன.

செயலாளர்கள்
P. பழனிச்சாமி, S. R. சுந்தரனம்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

## கிருஷ்ணன்— பாகவதர்

### திருச்சியில் விடுதலை முயற்சிக் கூட்டம்

11-11-45 மாலை டவுன்ஹாலில் முனிசிபல் கௌன்சிலர் தோழர் என். சங்கரன் அவர்கள் தலைமையில் கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக்கூட்டம் கூடிற்று. ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடினார்கள். கூட்டத்தில் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ., அழகிரிசாமி முதலியவர்கள் பேசியபின் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

### தீர்மானங்கள்

1. தமிழ்நாட்டின் சினிமா, நாடகம், இசை முதலிய துறைகளில் ஈடுபட்டு தமிழ் மக்களுக்குள் மணிகள் போல் விளங்கி அத்துறைகளின் முற்போக்கிற்கும், தமிழ் மக்களின் நலத்திற்கும் தொண்டாற்றி பேருதவிகளும், நன்கொடைகளும் வழங்கிவந்த நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கும், இசை உலக ஜோதி எம். கே. தியாகராச பாகவதர் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் ஆபத்தான ஆயுள்கால் சிறைத் தண்டனை கண்டு நாட்டு மக்கள் பெரிதும் வருந்துவதோடு அவர்கள் மீது கருணைகாட்டி இனியும் சிறைத் தண்டனை அனுபவிப்பதற்கில்லாமல் விடுதலை செய்ய வேண்டுமாய் திருச்சி மக்கள்சார்பாகக் கூட்டப்பட்ட இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. ஷியார்கள் விடுதலை முயற்சி முதலியவைகளுக்காக, நிதி திரட்டவும், மற்றும் ஆவன செய்யவும், ஒரு செல்வாக்குள்ள கமிட்டி நியமிக்கப்பட்டது.

### கமிட்டி அங்கத்தினர்கள்

தஞ்சை சேர்மன், ராவ்பகதூர் ஏ. ஒய். அருளானந்தசாமி நாடார், செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் தோழர் டி. சண்முகம், சேலம் முனிசிபல் சேர்மன் பி. ரத்தினசாமி பிள்ளை, திருப்பத்தூர் சேர்மன் வி. எஸ். வீரபத்திரன், திருப்பூர் சேர்மன் கே. என். பழனிச்சாமிக் கவுண்டர், ஈரோடு சேர்மன் ஆர். கே. வெங்கிடுசாமி, தாராபுரம் சேர்மன் & கோவாப்ரேடிவ் பாங்க் பிரசிடெண்ட் கே. முத்துகிருஷ்ண நாயுடு, கரூர் சேர்மன் எஸ். சின்னசாமி முதலியார், பெரியார் ஈ. வெ. ராமசாமி, டி. பி. வேதாசலம் திருச்சி, என். சங்கரன் திருச்சி, பி. பழனியப்ப முதலியார் (கிராம பஞ்சாயத்துக் கோர்ட் பிரசிடெண்ட் கரூர்) கே. ஏ. பி. விசுவநாதம் திருச்சி.

மற்றும் அங்கத்தினர்கள் பெயர்கள் அவர்களது சம்மதம் கிடைத்த பிறகு தெரிவிக்கப்படும்.

சம்மதம் தெரிந்துகொள்ளும் முன்பு யாருடைய பெய்ரையும் எந்தக்கமிட்டியிலும் போடக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுவதோடு,

தனித்தனியாக கூட்டங்கள் போட்டு கமிட்டி நியமிப்பதையும் நிறுத்திவிடவேண்டும் என்றும் பொதுமக்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

மற்றும் நாட்டில் அந்தந்தஇடங்களில் இருக்கும் அனுதாபத்தோழர்கள் ஆங்காங்குள்ள சேர்மன் ஜில்லாபோர்டு, பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட், மெம்பர்கள், மற்றும் பொதுஜன ஸ்தாபன பிரசிடெண்டுகள் ஆகியவர்களை இக்கமிட்டியில் அங்கத்தினர்களாக இருக்க சம்மதிக்கவேண்டிக்கொண்டு அவர்கள் சம்மத கையொப்பமும் வாங்கி திருச்சி தோழர் வேதாசலத்துக்கு அல்லது "குடிஅரசு"க்கு அனுப்பவேண்டுகிறோம்.

பணம் வசூலிக்கும் விஷயம் டிரஸ்டிகள், பொக்கிஷதார் ஏற்படுத்திக்கொண்டு ரசீது முதலியவை தயார்செய்துகொண்டு பின்னால் தெரிவிக்கப்படும்.

## ஜீவானந்தம்!

மதுரை திலகர் சதுக்கத்தில் 4-11-45-ல் நடந்த பொதுவுடமைக் கூட்டத்தில் தோழர் ப. ஜீவானந்தம் பேசுகையில் மக்கள் எந்த ஸ்தானை விரும்புகிறார்களோ அதை அடையலாமென்றும், இந்த நாட்டுப் பொருளாதாரத்தை வடநாட்டு முல்தானிகளும், முதலாளிகளும் சுரண்டுகிறார்கள் என்று பெரியார் ஈ. வெ. ரா. சொல்வது சரியென்றும், ஆதிதிராவிட மக்களை இனி பார்ப்பனீயம்ஏமாற்ற முடியாதென்றும் குறிப்பிட்டார்.

## குண்டு வீச்சு!

### சமாதிப் புரட்டு!

ஆஜ்மீர், நவ. 12-

பிரபல யோகியான சுவாமி பிரேமானந்தா, சமாதியில் 30 நாட்கள் இருந்து வெளிவருவதாகக் கூறி சமாதிக்குச் சென்றார். அவரது உத்திரவுப்படியே தயாரிக்கப்பட்ட சமாதியில் சுவாமிஜீ புகுந்து கொண்ட பிறகு அவரது கட்டளைப்படி சமாதியின் மேல் பாகம் காற்று நுழையாதபடி மூடப்பட்டது.

30 நாட்கள் முடிந்ததும் சமாதியைத் தோண்டி சுவாமிகளின் வருகையை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். ஆனால் சுவாமிஜீக்குப் பதிலாக பிணவாடை வெளி வந்தது. மகானுபாவரை மண் தின்றுகொண்டிருந்ததாம்.

(பத்திரிகைச் செய்தி)

அவருக்கும் ஒரு குரு பூஜை நடக்காமலா போய்விடும் என்று ஒரு பக்தர் கேட்கிறார்.

### ஒரு சந்தேகம்

ஆசியாவை விட்டு "வெள்ளையனே வெளியேபோ"என்று கதறும் காங்கரசுத் தியாகிகள் தேர்தலுக்குப்பின் ராஜவிசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டு தானே பதவியில் அமருவார்கள் என்று ஒரு காங்கரஸ் பிஞ்சு சந்தேகப்படுகிறது. உஸ்! சந்தேகப்படாதே!! குவிட் ஆசியா!!!

### வழக்கந்தான்!

கல்கி பத்திரிகை "பெரிய பதவியும், சின்னபுத்தியும" என்ற கட்டுரையை வாபஸ் பெற்றுவிட்டதாம். இதில் ஆச்சரியமொன்றுமில்லை. வார்தா விசுவாசிகளுக்கே இது வழக்கமான காரியந்தான்! (விமானி)

## சென்னை மாவட்ட 6-வது சுயமரியாதை மகாநாடும், சிவாஜி நாடகமும்

சென்னையில் 15-12-45 சனிக்கிழமை செண்ட்மேரீஸ் மண்டபத்தில், குடந்தை தோழர் வி. சின்னதம்பி தலைமையில் காலை 8 மணிக்கு மேற்படி மாநாடு துவக்கப்படும்.

தலைவர் பெரியார், தளபதி அண்ணாதுரை, புரட்சிக் கவி பாரதிதாசன் இன்னும் இயக்கத் தோழர்கள் பலரும் கலந்து கொள்வார்கள்.

அன்றிரவு 8 மணிக்கு தளபதி சி. என். ஏ. நடிக்கும் 'சிவாஜி' நாடகம் நடைபெறும்.

எம். எஸ். முத்து, வரவேற்புத் தலைவர்.

பி. ஏ. கே. பழனிசாமி, விளம்பர அதிகாரி.

பி. செல்வராஜ், கே. கோவிந்தசாமி செயலாளர்கள்.

என். வி. நடராசன், நாடகக் கமிட்டிக் காரியதரிசி.

முக்கிய குறிப்பு:

16-12-45 காலை ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கழக நிர்வாக அங்கத்தினர் கூட்டமும் மாலை கிருஷ்ணன் பாகவதர் விடுதலை முயற்சிக் கமிட்டிக் கூட்டமும் நடைபெறும்.

பெரியகுளம் உயர்நிலைப் பள்ளியில் 1-11-45-ல் கடவுள் வாழ்த்துப் பாட வேண்டிய வேளையில் அதற்குப் பதிலாக சடகோபன் என்ற மாணவர் தீபாவளி எதிர்ப்புக் கீதம் பாடினாராம். மாணவர்கள் காகோஷம் செய்து ஆதரிக்கவே இனிமேல் இத்தகைய பாடல்கள் பாடக்கூடாதென தலைமை ஆசிரியர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## தென்னாற்காடு மாவட்ட திராவிட இளைஞர்களுக்கு!

கறுப்பு சட்டைத் தொண்டர் படையில் சேர விரும்பும் ஆங்காங்குள்ள திராவிட இளைஞர்கள் தங்கள் தங்கள் ஊரிலேயே ஒன்றுகூடி தங்களுக்குள் ஒரு தலைவரைத் (கேப்டனை) தேர்ந்தெடுத்துக் கொண்டு தலைவருடைய முழு முகவரியையும், சேர்ந்தவர் பெயர்களையும் கீழுள்ள எனது முகவரிக்கு உடனே தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாவட்டத்தில் பயிற்சி நடைபெறும், இடமும், விபரமும் விரைவில் அறிவிக்கப்படும்.

ஆங்காங்கு சேரும் தோழர்கள் கவாத்து முதலிய பயிற்சிகளை உடனே பழகிக்கொள்ள வேண்டுகிறேன்.

ஆ. திராவிடமணி,
திராவிடர் கழகம், கடலூர். O. T.

## குளித்தலைக்குக் கவிஞர் வருகை!

### நிதி அளிப்பு விழா!

நாளை 18-11-45-உ ஞாயிறு மாலை நகர மண்டபத்தில் புரட்சிக் கவி பாரதிதாசனவர்களுக்கு நகர பொது மண்டபத்தில் நிதி அளிப்புவிழா நடைபெறும்.

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ., ஹானர்ஸ், ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., மு. கருணாநிதி முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள். அனைவரும் வருக!

## திருச்சியில் டாக்டர் மதுரம் உருவச்சிலை

காலஞ்சென்ற டாக்டர் மதுரம் அவர்களுடைய உருவச்சிலை 17000 ரூபாய் செலவில் சென்னையில் தயாரிக்கப்படுகிறது. அதை திருச்சியில் முக்கியமான இடத்தில் வைப்பதென நகரசபையார் தீர்மானித்துள்ளனர்.

இராணுவ சேவையிலிருந்து விலகிய
மோட்டார் டிரைவர்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்!

இராணுவ சேவையிலிருந்து விலகிய, தகுதியும், அனுபவமும் வாய்ந்த மோட்டார் டிரைவர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திர நகல்களுடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

தி கோயமுத்தூர் ட்ரான்ஸ் போர்ட் லிமிடெட்.,
யூனைட்டெட் மோட்டார்ஸ் பில்டிங்ஸ், கோயமுத்தூர்.

ராஜா முத்தையா

## கோவை மாவட்ட திராவிடர் கழக 6-வது மாநாடு

16-12-45-ல் பொள்ளாச்சியில் நடைபெறும்.

*தலைவர்:-* தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

*திறப்பாளர்:-* பெரியார் ஈ. வெ. ரா.,

*கொடியேற்றுபவர்:-* தோழர் என். அர்ச்சுனன் (பழயகோட்டை இளையபட்டக்காரர்)

*பெரியார் படத்திறப்பு:-* அன்பழகன் பி. ஏ., (Hons)

*நாகம்மையார் படத்திறப்பு:—* கனகம்மையார்—இராமசாமி.

(இரவு சீர்திருத்த நாடகம் சிறப்பாக நடைபெறும்)

---

## ஊரை ஏய்த்த சாமியார் ஓட்டம்!

வந்தவாசி, அக். 27—

வந்தவாசியில் இரண்டு மூன்று நாட்களாக ஒரு சாமியார் வந்து தங்கி, ஊமையைப் பேச வைப்பதாகவும், செவிடைத் தீர்ப்பதாகவும் கூறிக்கொண்டு ஆடம்பரம் செய்தார். மக்கள் அந்த மயக்கத்தில் விழுந்து அடிபணிந்தனர். இதைக் கண்ட சுயமரியாதைத் தோழர்கள் போலீசாருக்குத் தெரிவித்து அவரது போலி வேடத்தை வெளியாக்கவே போலீசார் சாமியைப் பரிசோதித்து விசாரிக்க, தான் ஒரு சக்கிலித் தொழிலாளி என்பதை தெரிவித்துக் கொண்டு மன்னிப்புப் பெற்று ஊரைவிட்டு ஓடிவிட்டார்.

---

## குடந்தையில் !

29-10-45-ல் குடந்தைக் கல்லூரி விரிவுரையாளர் தோழர் பி. எஸ். பிள்ளை எம். ஏ., தலைமையில் மேற்படி கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ., (Hons) 'காலமும் கருத்தும்' என்பது குறித்து சொற்பொழிவாற்றினார். செயலாளர் தோழர் சொக்கப்பா நன்றி கூறினார்.

* *

6-11-45 அன்று அதே கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தோழர் முத்து, இராசக்கண்ணு, எம். ஓ. எல். தலைமையில் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., 'சொல்வன்மை' என்பது குறித்துப் பேசினார். செயலாளர் சொக்கப்பா நன்றி கூறினார்.

## சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் வாரக்கொண்டாட்டம்!

பச்சையப்பன் கல்லூரித்தமிழ்ச் சங்கம் 25-10-45 முதல் 28-10-45 வரை நான்கு நாட்களைத் தமிழ் வாரமாகக் கொண்டாடியது.

25-10-45 ராவ்பகதூர் பி. வி. நாராயணசாமி நாயுடு தலைமையில் மாணவர் பேச்சுப் போட்டியும், சர். பி. டி. ராஜன் தலைமையில் 'மனோன்மணீயம்' நாடகமும் நடைபெற்றன. 27-10-45-ல் தமிழ் மாணவிகளால் நடைபெற்ற கதம்ப நிகழ்ச்சிக்குத் தோழர் எஸ். ராமசாமி நாயுடு தலைமை வகித்தார். தலைவர் ராமசாமி நாயுடு, B. O. L., (Hons) வகுப்பு மாணவர்களின் உபகார சம்பளத்திற்காக 600 ரூபாய் நன்கொடை அளித்தார். தமிழ்ப் பேராசிரியர் மு. வரதராசனார் நன்றிகூற விழா முடிவுற்றது வெகு சிறப்பாக!

---

## ஈரோடு மருத்துவர் கூட்டம்

4-11-45 காலை 9 மணிக்கு ஈரோடு நாயக்கர் சத்திரத்தில் மாதாந்திரக் கூட்டம் தோழர் கரூர் கி. மாணிக்கம் தலைமையில் நடந்தது. பொது மக்களும் மருத்துவ மாணவ மாணவிகளும் சுமார் 300 பேர் கூடியிருந்தனர். கீழ்க்கண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர் சி. ரத்தினசாமி, பொருளாளர் பி. ஆறுமுகம், செயலாளர் கே. வெள்ளைசாமி, துணைச் செயலாளர் ஈ. கே. கருப்பையா. கூட்டம் பிற்பகல் 2-மணிக்கு முடிவுற்றது.

---

மதுரை எம். எஸ். ராமசாமி இல்லத்தில் தோழர் பி. எஸ். காசி தலைமையில் நடந்த நன்மான இளைஞர் கூட்டத்தில் தாலமுத்து—நடாராசன் வாசகசாலை திறப்பதென்றும், திறப்புவிழாவிற்கு தளபதி அண்ணாதுரை, நெடுஞ்செழியன், நீலமேகம் ஆகியோரை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

* *

7-11-45 அன்று மாலை காங்கேயன் பார்க்கில் திராவிட மாணவர் கழகத்தினாதரவில் கூடிய மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு தோழர் அமீர் அலி தலைமை தாங்கினார். தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் சொற்பொழிவாற்றினார். சொக்கப்பா நன்றி கூறலுடன் கூட்டம் முடிந்தது.

## இராசீபுரத்தில் "சாந்தா" நாடகம்

நாகை திராவிட நாடக சபையாரால் சுமார் 3 வாரங்களாக நடிக்கப்பட்டுவரும் சாந்தா நாடகத்தைப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்வதற்காக நாமகிரிப்பேட்டை திராவிடர் கழகத்தினர் 7-11-45ல் ஒரு வெள்ளிக்கோப்பை பரிசு அளித்தனர்.

31-10-45-ந் தேதி பேளுக்குறிச்சி மிட்டாதார் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் மேற்படி நாடக சபையாருக்கு ஒரு பெரிய வெள்ளிக்கோப்பையும், பள்ளப்பட்டி கிராம அதிகாரி தோழர் பி. டி. மாரிமுத்து ஒரு வெள்ளிக்கோப்பையும் பரிசளித்தனர். கழகத் தலைவர் ஆர். வி. கோபால் நன்றி கூறினார்.

---

# திருமணங்கள்

7-11-45 ந்தேதி புதன்கிழமை காலை குடந்தை தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் அகர கடம்பனூர் வெங்கடாசலம் பிள்ளை மகன் தோழர் சுப்பிரமணியனுக்கும், குருக்கத்தி இரத்தினம் பிள்ளை புதல்வி தோழர் அஞ்சம்மாளுக்கும் திருமணம் நிகழ்ந்தது. தோழர்கள் டி. பி. ஆறுமுகம், ஆர். வி. கோபால், சின்னையன் முதலியோர் பேசினார்கள்.

o o

காரப்பிடாகையில் கல்யாண சுந்திரம் அவர்களின் புதல்வர் தோழர் க. சுந்தரனுக்கும், திருவாரூர் வி. குப்புசாமி அவர்களின் புதல்வி தோழர் சம்பூர்ணத்திற்கும், நாகை தோழர் விசயராகவலு தலைமையில் 7-11-45-ல் திருமணம் நடைபெற்றது. தோழர் வி. ஜி. ரெங்காசு, எஸ். கே. சாமி, கருணானந்தம், அரங்கண்ணல் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பல பரிசுகளும், வாழ்த்துக்களும் அளிக்கப்பட்டன.

o o

பெரம்பலூர் தாலுக்கா கொனக்காநத்தத்தில் 28-10-45 ஞாயிறு காலை தோழர் பி. சிவபிச்சை தலைமையில் தோழர் பி. ஜெகநாதனுக்கும், தோழர் கனகம்மையாருக்கும் சுயமரியாதை வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்று பல தோழர்கள் பேசினார்கள். பரிசுகளும், வாழ்த்துக்களும் வந்தன. 'குடி அரசு', 'திராவிடநாடு பத்திரிகைகளுக்கு முறையே 1 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

o o

சலகண்டபுரத்தில் தோழர்கள் அய்யாக்கண்ணு-பழனியம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் 7-11-45-ல் நடைபெற்றதின் நினைவாக 'குடி அரசு'க்கு 1 ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மா தங்கராஜ் எஸ் கருப்பையா மு
கிருஷ்ணன் டி கே பாப்பு எ எத்து
ராசலு வெ வீராசாமி ஜி பால
கிருஷ்ணன் ஆர் ரெங்காதன் என்
கன்னையன் டி மாரியப்பன் வி எம்
கிருஷ்ணன் வி கண்ணன் ஆர்
மாணிக்கவாசகன் பி நடராசன்
டி எ எம் வரகுணம் எ தர்மராஜ் ஜி
காசிநாதன் எம் ராமசாமி ஆர் பஞ்
சாபிகேசன் எஸ் நெடுமாறன் ஆர்
ரெங்கய்யா கூடலிங்க நாடார் வீரப்ப
பிள்ளை பி கதிர்வேலு துரைராசு
ஜே ரத்தினசாமி எஸ் அபிமன்யு எஸ்
சண்முக சுந்தரம் டி எம் ராஜா பல்
பொடி விசுவலிங்கம் கே எஸ் வாசன்
எம் கனகசபாபதி எம் செங்குட்டுவன்
ஆர் அம்பலவாணன் ஆர் பி சாமி கே
கே சாமி என் கோவிந்தசாமி பஞ்சாமி
கோவிந்தம்மாள் எம் செல்லப்பா ரெ
செல்லம்மாள் மு சோதிஅம்மையார்
எம் எ செங்குட்டுவன் எம் வி ராம
மூர்த்தி சின்னையன் பி முனுசாமி
வேதாசலம் அண்ணாமலை வையாபுரி
கே வெங்கடப்பெருமாள் வி எ செல்
லக்கண்ணு எ சவுந்தரராசன்
ராமானுசம் தங்கவேலு கோ
பாலகிருஷ்ணன் கோவிந்த
ராசன் பி கிருஷ்ணசாமி ஜகதீசன்
சிராமுலு சீனிவாசன் கன்னையன்
காளியப்பன் லெட்சுமணன் சொக்க
லிங்கம் ஆறுமுகம் ராமசாமி பெரிய
சாமி என் ராசகோபால் எ பொன்னு
சாமி வி ஆறுமுகம் வி பி அஞ்சலை
அம்மாள் தங்கையன் ரா நடராசன் சிங்
காரம் எம் ஜி பெருமாள் கா சின்னு
சாமி ஓ பரமசிவம் சி காத்தான் பிச்சை
வி பத்மாவதி அம்மாள்.

பொன்னேரி கிராமம்:

கே காகராஜன் ரெ சண்முகம் ஆ
வீரமுத்து எம் தங்கவேலு எம் மாணிக்
கம் மூக்கன் முருகன் ந சாமிக்கண்ணு
ம முருகன் கலியன் ராமசாமி அ ராம
சாமி எம் கங்காசலம் என் அப்பன்
க கனகன் மு சின்னதம்பி பொன்னன்
சக்கரபாணி நடராசன் அப்பாவு மாய
வன் எஸ் ரங்கசாமி சண்முக சுந்தரம்
சிவகாமி பொட்டுராசன் மா சிங்கார
வேலு மா ராஜவேலு க மாரி செ அப்பாவு
தொப்பைராமன் வடிவேலு க அமா
வாசை அப்பாவுகந்தன் மூக்கன் வேணு
ஜயகண்ணு பெருமாள் சிவபெருமான்
வீரமுத்து செல்லன் முருகன் எம்
கோபாலகிருஷ்ணன் எ கனகசபை எஸ்
காலரம்பு.

தூத்துக்குடி:

வீ கிருஷ்ணன் தனுஷ்கோடி மு
ரெங்கசாமி நா அழகர்சாமி செ முத்
தையா மா வேலுசாமி வே முத்து
சாமி சு நாகப்பன் எம் மாரியப்பன்
எ துரைசாமி எ லெட்சுமணன் அந்
தோனிராயப்பன் ப பூராஜா பி சங்
கரநாராயணன் பி எஸ் சண்முகம் எஸ்
போத்தி சு ராசகோபால் ஆ வேலா
யுதம் சி காசி மு குமாரசாமி ப காசி
கோ கந்தசாமி பொ தங்கசாமி பொ
தங்கசாமி பெ பால் ப நாராயணன்
கோ பலவேசமுத்து எஸ் நடராசன்
பி தங்கதுரை த ராமலிங்கம் மா குரு
சாமி எஸ் ராஜா வ பெரியசாமி
ஆ அழகய்யா வெ தங்க
சாமி சி தவமணி சு ஆபிரகாம் ஆர்
பாலகிருஷ்ணன் சி மாரியப்பன் எஸ்
தங்கசாமி வி சிவலிங்கம் எஸ் அண்
ணாமலை தா தங்கசாமி சி சண்மு
கம் ஒய் மாணிக்கநாடார் எ செல்லையா
ஆ நாராயணன் தே ராமசாமி மு
காசியப்பன் ரா புத்திசிகாமணி தே
பால்ராஜ் எஸ் முனியசாமி சு வேத
மணி கே எஸ் காசிராசன் டி ஆர்
சபாபதியார் மு வன்னியராசன் த
தில்லைச் சிதம்பரம் ச சின்னமணி கு
ராமசாமி எஸ் ரத்தினம் மு ஞான
சிகாமணி எஸ் தருமலிங்கம் எஸ் அரு
ணாசலம் எஸ் பி அருணாசலம் த சு
பலவேசம் த மாணிக்கம் க செல்லையா
க சின்னப்பழம் எம் குருசாமி பி
துரையப்பன் கோ ஜேம்ஸ் த லெட்சு
மணன் ச க பே முத்து எஸ் இ தங்க
ராமலிங்கம் சு அய்யம்பெருமாள் சோ
பாண்யன் கோபால் ராஜ் மு சீனிவா
சகம் த காசி நா ஆத்தியப்பன் பொ
துரைபாண்டியன் தெ வடிவேலு சி
ஆவுடையப்பன் எஸ் எம் எம் சாமி.

ஸ்ரீரங்கம்:

எஸ் மணி பி வேலாயுதம் கே ஆர்
உத்தண்டி பி ரங்கசாமி ஆர் கோவிந்த
ராசலு அணஞ்சன் டி பி ரெங்கராசன்
என் ரெங்கராசன் வி வெற்றிச் செல்
வன் எஸ் பி பெரியசாமி ராமானுசம்
டி பி திராவிடமுத்து பாலகிருஷ்ணன்
எஸ் ராஜய்யா நல்லுசாமி வி நடேசன்
சிதம்பரம் பி எஸ் பாண்டியன் டி எம்
பெரியசாமி எஸ் ஜி ராசகோபாலன் டி
பி ரெங்கராசன் டி பி முத்து டி பி
செங்குட்டுவன் அமுர்தம் அம்மையார்
நாச்சார் திருமதி ரெங்கராசன் எம்
தங்கவேலு ஆர் குப்புசாமி கருப்பண்
ணன்.

வண்ணாரப்பேட்டை சென்னை:

பொன்னுசாமி நாடார் எஸ் பி பி
பேச்சி அம்மாள் எஸ் பி பி திராவிட
மணி எஸ் பி பி தெய்வநாயகி எஸ்
பி பி ஜெகஜோதி மணி எஸ் பி பி
ராஜ ராஜேஸ்வரி எஸ் பி பி சற்குண
சுந்தரிதேவி எம் எ சங்கையா வி வெள்
ளைச்சாமி மாரியப்பன் முத்தையா

கணியூர்:

எ எஸ் துரைசாமி மு திருமலை
சாமி சு பங்காரு என் இருளப்பன்
ம சுப்பாநாயுடு எஸ் கே கிருஷ்ணம்
பிள்ளை வே கணபதி கே எ முரு
கேசன் கே வெங்கடாசலம் கே ஆர்
நாச்சிமுத்து என் கே சுப்ரமணியன்
கே எஸ் பி மாணிக்க ஆச்சாரியார் எ
மாணிக்கம் கே என் அங்கமுத்து பி
செங்கமலை கே பி வெங்கடாசலம் க
கோவிந்தன் க சுப்ரமணியன் வே கண
பதி சுந்திரம் எ கணக்கஞ்செட்டியார்
க நாராயணசாமி டி கருப்புணன் கே
வீரநாயக்கர் கோ குட்புசாமி தி அங்க
முத்து கே பி மாரியப்பன்.

அம்மாபேட்டை சேலம்:-

கே எம் ராசகோபால் ஓ ஆர் சீதா
ராம் குப்பம்மாள் லட்சுமி அம்மாள்
பி எம் கிருஷ்ணன் எம் வி வரதராசலு
பி வி துரைசாமி கே எம் சிவபாக்கியம்
கே எம் சுப்பிரமணி கே துரைராஜு
கே ராமசாமி கே பி ரங்கசாமி எ ஆர்
சங்கரன் ஆர் எம் லட்சுமணன் எஸ்
எஸ் லட்சுமய்யன் எம் வி பி கே எஸ் பி
பி கே கோபாலன் கே. எஸ் கந்தசாமி
சுப்பிரமணியன் வேணுகோபால்செட்டி
வி சுப்பிரமணியன் பி துரைசாமி பி எம்
தனம்.

சுந்தரசெட்டித் தெரு சேலம்

பி எம் என் மணி அ வெங்கடசாமி
ந நாராயணன் என் முத்துகிருஷ்ணன்
மு ராமசாமி S சி கோபாலன் டி என்
கனகராசு S சாமுண்டி கே பச்சமுத்து
ஆர் முத்து எ என் ராசகோபால் வி
சண்முகம் எம் கே ரத்தினம் பி ராம
சாமி வெ ரத்தினம்பாள் ம நீலாம்
பாள் வள்ளியம்மா ஞானாம்பாள்
வி கோவிந்தராசன் மா குப்புசாமி
வி எம் ரங்கராமானுசம் எ அங்கமுத்து
ரா சி சுப்பரமணிய செட்டி கே எ பெரு
மாள் பி எம் அருணாசலம் நரசிம்மன்
எம் ராசம் நா நடேசம் செட்டி ந முனு
சாமி.

இளங்காடு:

ஆ வரதராசன் சீனு மணி மொழி
யன் சா மருதவாணன் ஈ வி மாரியப்
பன் ம சோலையன் வெ கருப்பை
யன் ந சுந்தரம் ச குலசேகரன் க
இளவழகன் சி இளங்கோவன் எஸ்
அழகப்பன் கே கோதண்டபாணி எம்
அரங்கராசன் கே சங்கிலிமுத்து ப சுந்
தரமூர்த்தி க சபாபதி கோ
இராமய்யன் தெ ஆறுமுகம் கோ பால
கிருட்டினன் டி திருஞானம்.

தஞ்சாவூர்:

ஜி ரெங்கசாமி டி பாலசுப்ரமணியன்
எம் பாலசுப்ரமணியன் டி சுப்ரமணிய
பிள்ளை கோவிந்தராசலு எஸ் பி நவ
நீதம் எஸ் ராசப்பா வேதமலை ராம
லிங்கம் டி முத்தண்ணன் டி குமாரசாமி
கி பழனிசாமி பி ஜயராம செட்டியார்
ஆர் கருப்பண்ணன் ஜி தியாகராசன்
டி கே ரத்னம் டி கே குருசாமி என்
எஸ் சண்முக வடிவேலு டி கே ஆறு
முகம் டி எஸ் சம்மந்தம் பி கே சோம
சுந்தரம் ரங்கராஜலு நாயுடு தங்கவேலு
எஸ் முருகையன் அமிர்தலிங்கம் முத்
தண்ண நாட்டார் ஜயராமன் வீரையன்

வீ கந்தசாமி பி கே மோகன விசயன் டி ஆர் கிருஷ்ணசாமி.

முத்துப்பேட்டை:

ஆர் சாமிநாதன் கே சீனிவாசன் ஆர் ராமமூர்த்தி ஆர் கணபதி வி ராமநாதன் சின்னதம்பி கே ராமானுசம் வி பன்னீர் செல்வம் என் ஆர் கண்ணையன் ஏ கணபதி எஸ் ராகவன் திரு தெட்சணாமூர்த்தி ஏ கிருஷ்ணன் எஸ் தாயுமானம் பி வி வேலன் ஏ ராமச்சந்திரன் சு வே முருகையா தேவர் கல்யாணசுந்தரம் கே ஆறுமுகம் ஆர் தெட்சணாமூர்த்தி என் ஆர் கோவிந்தசாமி பி சோமசுந்தரம்.

சலகண்டபுரம்:

ப கண்ணன் வே குருசாமி அ ப அர்த்தநாரி க நெடுஞ்செழியன் பொ சின்னமாரிமுத்து சொ மாணிக்கம் கா நடராசன் க குஞ்சிதம் மா ஆறுமுகம் எம் ஏ வெங்கடாசலம் ரா சண்முகம் வே ஆறுமுகம் ந சீதாராமன் வீ பசுவையா ஏ முருகேசன் த முருகன் சு இராசமாணிக்கம் செட்டி அ வடிவேலு க அ பரமசிவம் ர அ அண்ணாமலை மு சுந்திரன் ரா சித்தையன் ர கந்தசாமி ப மாரியப்பன் மு வெங்கடாசலம் செ நஞ்சுண்டன் ந வீரிசெட்டி. ச கோவிந்தன் சு மாரிமுத்து கா சி கிருஷ்ணன் கு ராசரத்தினம் கு அய்யண்ணசெட்டி த க குருநாதன் ஐ.ந அர்த்தநாரி மு குருநாதசெட்டி வீரபாலன் சா ஆறுமுகம் அ வெங்கடாசலம் சி கந்தசாமி சீரங்கன் கு ந அர்த்தநாரி அ சின்னுசாமி பெ தனபாக்கியம் பி செல்லப்பன் பெரியண்ணன் கருப்பண்ணன் எல்லப்பன் ம அர்த்தநாரிசெட்டி க சிவலிங்கம் ம பழனிச்சாமி ச சித்துராசன் நா அ சித்தப்பன் சி இராமநாதன் பாச அர்த்தநாரிசாமி.

கூடலூர்:

ஆ திராவிடமணி ஆர் தையநாயகி ந அழகமுத்து சு ஜெயபால் சி இளவழகன் இரா வெங்கடாசலம் நெல்விகுப்பம் சனார்த்தனம் ப வரதராசன் சு செளந்திரபாண்டியன் வே கிருஷ்ணமூர்த்தி ர குருநாதன் ஏ இளங்கோ டி ஜெயராமன் சஞ்சீவிராமன் பி முனுசாமி வி ஜானகிராமன் கு கோவிந்தசாமி ராமச்சந்திரன் எஸ் ரங்கநாதன் என் எஸ் மோனியம் எம் சம்பூ எம் வைத்திலிங்கம் பி ரங்கசாமி கி கோவிந்தராசன் கோ ராமதாசு பா வரதராசு து தேவநாதன் வெ சொக்கலிங்கம்.

புதுப்பேட்டை:

வி வீரபத்ரன் ஆர் லட்சுமணன் டி வீ வேலன் எஸ் சின்னராசு கே சிவநேசன் எஸ் ஆலாலசுந்தரம் எஸ் எஸ் கிருஷ்ணசாமி கே வி வைத்தியலிங்கம் ஆர் பிரதன்.

திருத்துறைப்பூண்டி:

டி வி சிவஞான கோவிந்தசாமி பி எஸ் நடேசன் கோவிந்தராஜலு சோ தண்டபாணி மகாதேவன் ஜி சண்முகசுந்தரம் சமத்துவம் வடிவேலு கே வி கல்யாண சுந்தரம் ஆர் கோவிந்தராசலு பி எஸ் மணியம் தெட்சணாமூர்த்தி வி கதிரவன் கருணானந்தம் நடராசன் ருத்திராபதி தங்கவேலு சுப்பிரமணியன் வேம்பய்யன் ஜெயராமன் சண்முகம் மணி அரங்கண்ணல்.

கோயமுத்தூர்:

ப பாலசுந்தரம் சு ஆறுமுகம் ம கிருஷ்ணமூர்த்தி ந கந்தசாமி க தண்டபாணி சு நாகமாணிக்கம் அ ராஜகோபால் சி ராமச்சந்திரன் வி கோவிந்தசாமி ம சாமிநாதன் சே அ ராசமாணிக்கம்.

கணேசபுரம்:

பி கனகராசு ல கணபதி ஏ முத்துகிருஷ்ணன் வ சுப்பையா ல ஜெகநாதன் சு ராஜய்யா எம் மருதநாயகம் எம் எஸ் கிருஷ்ணன் எம் எஸ் பொன்னுசாமி எம் ராமசாமி எம் என் அருணாசலம் அனந்தப்பா எம் ஏ மூக்கையா ஆ செல்லையா பி பால்ராஜ் பொ தொல்காப்பியன்.

பாலமேடு:

S பழனிசாமி ம ச கு கந்தசாமி அ கூடலிங்கம் ஏ குமரன் ஏ ராமய்யா ஏ பொன்னுசாமி வி நடரா[illegible] முத்துகிருஷ்ணன் S S பாலகிருஷ்ண நாட்டார் என் கண்ணுசாமி நாடார் போ வெ அ பெருமாள் நாடார் ச கணபதி நாடார் S முத்தையா ம தனுஷ்கோடி அய்யண்ணன் பி சுப்பையா ச சுப்ரமணிய நாடார் போ பெ அ சோமசுந்தரம் பி பி ஏ காளகுட்டி நா வ முருகையன்.

சிதம்பரம்:

கி தியாகராசன் ப து அரங்கசாமி க திருமாறன் தில்லை வில்லாளன் மு கோவிந்தராஜன் C S சடகோபன் அ சதாசிவம் பெ வீரபாண்டியன் சி ஏ வி துரைக்கண்ணு மு தமிழொளி வி எம் முத்து டி கே மூர்த்தி அ கைலாசம் சீ வீரப்பன் டி முருகையன் டி கோபால கிருஷ்ணன் டி நடராசன் கோ தாண்டவமூர்த்தி S சிங்காரம் அ கோவிந்தராசு எ பி சுப்பிரமணியன் எம் கே பாண்டியன் வி வீராசாமி டி பத்மநாபன் ஆர் எம் ஆறுமுகம் பி கே வேணுகோபால் மு கிருஷ்ணமூர்த்தி ஆ முருகன் பெருமாள் சி ஆறுமுக பாண்டியன் ச கங்கையநாடார் ஆர் இராசகோபால் வி சிவன் கோவிந்தசாமி சி மா[illegible] என் பிச்சமுத்து கொ இராசமாணிக்கம் கி ஆ மா காசிநாதன் எம் கே கணேசன் ஆர் தம்பையா ஜி இராஜ கணேசன் அ வேணுகோபால் வி வி ராமன் பெ வெள்ளையப்பன் கே சம்பந்தம் வில்லை இராவணன் திரு பூ பச்சையப்பன் மறையன்பன் க முருகேசன் கே கோவிந்தராசு ப வெற்பழகன் ஆர் சேது ராமகாஜா ஆர் இராம கிருட்டினன் எ திருவேங்கடம் நா குஞ்சிதபாதன் இரா குழுத்தலைவன் ஏ வேணுகோபாலன் ஆர் ஜெயராமுலு ரா இராமராசன் ச செ அரங்கராசன் ரா அரங்கராசன் கோ குப்புசாமி ராஜா எஸ் சரவணமுத்து கு பா குமாரபாண்டியன் கெ தங்கசாமி வே நடராசன் ஆ பரமசிவம் சீ கண்ணையன் த முருகேசன் நா மு மாணிக்கம் புலவர்.

(தொடரும்)

---

## திருத்தம்

3-11-45ல் வெளியான தீபாவளி கொண்டாடாத தீரர்கள் பட்டியில் சுத்துகுழி என்றிருப்பதை புவனகிரி என்று மாற்றிக்கொள்ளவும்.

## இரட்டைமலை சீனிவாசன் இரங்கற் கூட்டங்கள்

(கீழ்க்கண்ட இடங்களில் தோழர் இரட்டைமலை சீனிவாசன் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேறின)

சென்னை புரசை தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் கூட்டத்தில்!

இராமானுஜம் புதூர் 12-10-45 ஐக்ய அபிவிருத்தி சங்கக் கூட்டம்.

கோவை 13-10-45 ஆதிதிராவிட மகாஜன சங்க அனுதாபக் கூட்டமும், தோழர் அந்தோனி குரூசுக்குச் சீனிவாசன் என்ற பெயர் மாற்றமும் நடைபெற்றது.

ஏர்வாடி ஆதிதிராவிட மகாஜன சங்கம் 14-10-45-ல் நடைபெற்ற கூட்டம்.

சுமங்கலி கிராமத்தில் 6-10-45ல் தோழர் பெருமாள் தலைமையில் நிகழ்ந்த கூட்டம்.

அழிவடை தாங்கி கிராமத்தில் 7-10-45-ல் நடந்த கூட்டம்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழகம் 21-10-45-ல் கூட்டம்.

விருதுநகர் 20-10-45-ல் ஷெடியூல் வகுப்புப் பெடரேஷன் விசேடக் கூட்டம்.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.